உ

கணபதி துணை.

திருமாகறல் பதிற்றுப்பத்தந்தாதி.

திருமாகறல் சிவநேசர்களில் ஒருவர் இயற்றிய

இஃது

ஷை யூர்

ம-ள-ள-ஸ்ரீ கச்சியப்பர் தேவராஜமுதலியார் குமாரர்

ம-ள-ள-ஸ்ரீ கச்சியப்பர் இராஜரத்தினமுதலியாரால்

பிழைதிருத்தப்பட்டும்

ஷை யூர் செந்தமிழ்ப்புலவர்

ம-ள-ள-ஸ்ரீ கார்த்திகேயமுதலியாராலும்

காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் பக்தவித்வான்

ம-ள-ள-ஸ்ரீ பு. கனகசபை நாயகராலும்

பார்வையிடப்பட்டும்

ஷை யூர் உபாத்தியாயர்

ம-ள-ஸ்ரீ மா-குப்புச்சாமிமுதலியார்வேண்டுகோளின்படி

பத்திமான்கள் பலருக்கும் பயன்படும்பொருட்டு

காஞ்சீபுரம் சராப்பு வியாபாரம்

ம-ள-ள-ஸ்ரீ ஒலேட்டி. குப்புச்சாமிசெட்டியார்

ம-ள-ள-ஸ்ரீ காடி. நஞ்சையசெட்டியார்

இவர்களால்

காஞ்சீபுரம் ஸ்ரீகாஞ்சீபூஷண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1906

உ

கணபதிதுணை.

திருமாகறல் பதிற்றுப்பத்தந்தாதி.

விநாயகர் காப்பு.

செய்யாளுறைசெங்கமலமுந்தண் சேதாம்பலும்வெண்ணெய்தலுமொ ண்
மையார்குவளைசெங்குவளை மலரும்வயன்மாகறல்வாழு ம்
பையாடரவமணிந்தார்க்குப் பதிற்றுப்பத்தந்தாதிசொல ப்
பொய்யாமொழியேரம்பனிரு புனிதமலர்த்தாடலைக்கணிவா ம்.

நூல்.

கமலமேவுமெண் கண்ணனுமாயனு ந்
தமையுணர்ந்தில ராய்ச்சகமீப்பொ ர
நிமலவாரொளியாய் நிமிர்மாகற ல்
அமலபோற்றி யணிவிடைப்பாக னே (க)

பாகம்பெண்ணுருவானபராப ர
மாகந்தோய்பொழின் மாகறல்வாழி ய
நாகமாரிதழிச்சடை நம்பவெ ன்
சோகநீக்கி யருள்புரிதூய னே (உ)

தூயஞானச்சுடர்கெழுசோதியெ ன்
மாயைநீக்கி மலரடிதந்தவ ன்
சேய்நதிப்புனல் சூழ்திருமாகற ல்
நாயகன்புற்றிடங் கொண்டநாத னே (௩)

நாதனையரி தேடருநாண்மலர் ப்
பாதனோவப் பரவையின்பாற்செலு ந்
தூதனையென் றுயாகளைந்தாளுவா ய்
சீதவார்பொழின் மாகறற்றேவ னே (௪)

தேவதேவனின் சேவடிப்போதில்யா ன்
றாவுநாண்மல ருண்ணடித்தொண்டா ம்
மூவர்சென்னி முகந்ததென்றுனு னை
யாவரோதிகர் மாகறலீச னே (௫)

ஈசனேயிம யாசலமாதுங ன்
நேசனேதிரு மாகறனித்த னே
பூசியேனின் புகழ்த்திருவாகம ம்
வாசியேன்பிறப் பெவ்வணமாறு மே (௬)

எவ்வணநினைந் தேத்துமவர்முன ம்
அவ்வணம்வந் தருள்செயுமைம்முக ன்
மைவ்வணப்பொழின் மாகறல்வாண னை
இவ்வணத்தனென் றோதற்கெளிய தோ (௭)

எளியருக்கெளி தாய்வருமெம்பிரா ன்
களியருக்கரி தாகியகண்ணுத ல்
வெளிபுலாம்பொழின் மாகறல்வாழ்பர ன்
களிபாத நயந்தவரன்ப ரே (௮)

அன்பரேத்துதென் மாகறலாள்பவ ன்
பொன்பராவு சடிலம்பொறுத்தவ ன்
என்பராவணி யீசனிருகழ ன்
முன்பிறைஞ்சினர் மூவுலகாள்வ ரே (௯)

உலகமேத்து மொளியிசைமாகற ல்
நலமொடாருங் கங்காதரனுத க்
இலகுதொண்டு புரியவெண்கண ர்
அலகில்கண்ணார்க ளம்புயகண்ண ரே (௧௦)

வேறு.

கண்ணனுநான்முகனுமினுங் காணாதவடிமுடியை
எண்ணுமடியவர்காண வெளிதின்வெளிப்படுஞ்சோதி
துண்ணெனவெங்கலிநீக்கச் சுரும்பலர்பூம்பொழிலுடுத்த
வண்ணவயன்மாகறலிற் சிவக்குறியாய்வளர்ந்ததுவே (௧௧)

வளர்மதிச்செஞ்சடையணியு மாகறல்வாழகத்தீசன்
முளரிபுரைதிருமேனி முக்கணனெண்புயமுடையான்
றளவுநகைக்கயல்விழியா டழுவுறுநூன்மணிமார்பன்
வளவன்முனம்பொன்னுடும்பின் வாலெனவீற்றிருந்தானே (௧௨)

இருந்தாலுநடந்தாலு மெழுந்தாலுங்கிடந்தாலுந்
திருந்தாரவடமணியுஞ் செழுமுலையார்ப்புணர்ந்தாலு
மருந்தாரவயின்றாலுந் துயின்றாலுமைம்பொறிவாய்த்
திரிந்தாலுமாகறல்வாழ் சிவக்கொழுந்தைமறவேனே (௧௩)

மறவாதுநினைமனமே வாழ்வாய்நீநெடுங்காலம்
பிறவாழிநீந்துதற்கோர் பெரும்புணையாஞ்சுரும்பணையு
நறவாருமலர்ச்சோலை மாகறன்மாநகர்மேய
கறையாருமிடற்றிறைவன் கனைகழற்செம்மலர்ச்சரணே (௧௪)

சரணமிசைமால்விழியுந் தடக்கையினான்முகன்றலையு
மூரணியவானவர் தலைமீதான் மூரியெலும்பனையுமேந்தும்
இரணியவீழெனுஞ்சடையோ னென்குறைதீர்த்தருள்புரியத்
தரணிபுகழ்மாகறலிற் றனிவிடைமேல்வந்தானே (௧௫)

வந்தாரும்வாழ்வடையு மாகறல்வாழ்மணிகண்டன்
இந்தாருமணிமௌலி யெம்பெருமா னும்பர்பிரான்
நந்தாசெங்கரத்திறைக்கு நான்முகற்குநாடரிய
வைந்தாமென்மலரடியைப் பணிந்துவினைதணிந்தேனே (௧௬)

தேனுருமொழிமடவார் விழிவலையிற்சிமிழ்ப்புண்டு
நானுவெந்துயர்கூர்ந்து நலியுமெனைத்தடுத்தாண்ட
கூனுர்வெண்பிறையணியுங் கோமானைக்கொண்டறவழ்
கானுரும்பொழிற்றிருமா கறனகரிற்கண்டேனே (கஎ)

கண்டார்தம்பவமகற்றுங் கடிபொழின்மாகறற்பெருமான்
வண்டாருமிதழியணி மணிச்சடையிற்பிறைக்கொழுந்துந்
தொண்டானுர்க்கருள்பொழியுஞ் சுந்தரஞ்சேரைம்முகமுங்
கண்டாரேழ்பிறவியெனுங் கருங்கடலைக்கடந்தாரே (கஅ)

கடம்பநகர்சிலம்பேசங் காளத்தியெழிற்கயிலை
குடந்தைமுதுவரையாரூர் கூடலண்ணமலைவேளூர்
தடங்கச்சிமறைசைவட வணந்தில்லைத்தலமேவி
நடம்புரிசங்கரர்க்கினிய நலந்தருமாகறற்பதியே (கக)

பதியாகிப்பசுவாகிப் பாதியுமொன்றுய்ப்பலவாய்
விதிமால்சங்கரனுகி விண்ணவராய்மண்ணவராய்க்
கதிராய்வெண்மதியாகு மாகறல்வாழ்கறைக்கண்டன்
மதியார்தம்முளம்பதியா னவன்மாயமறியேனே (உ0)

வேறு.

அறிவார்புகழ்மா கறலங்கணனை
வெறியாரிதழிச் சடைவேதியனை
மறியார்கரவா னவனைத்தொழுதா
றறியாவினைவே ரொடுபற்றறுமே (உக)

பற்றூர்புரமட் டபரன்பரைசெம்
மூற்றுமுலைநேர் திருமொய்ம்புடையான்
கற்றூர்புகழ்மா கறல்கண்ணுதறன்
னற்றுடொழுநண் ணினர்விண்ணவரே (உஉ)

விண்ணுற்றபதம் பெறவேண்டுதிரேல்
வண்ணப்பொழின்மா கறல்வாழ்பரமன்
கண்ணுற்கரிதா யகழற்கினியார்
எண்ணுற்றபதந் தொழுதெய்துமினே (௨௩)

மின்னேர்சடைமா கறல்வாழ்விகிர்தன்
றன்னேரிலிதா யிலிதந்தையிலான்
பன்னாகமணிந் தபராஞ்சுடரோன்
நன்னாமநவிற் றுதிநன்மனனே (௨௪)

மனனேயுனைநா ளும்வணங்கிடுவேன்
சினமால்விடைமா கறல்வாழ்சிவனைக்
கனிநேர்மொழியம் பிகைகாதலனைப்
பணிமாமலர்கொண் டுபணிந்திடுவாய் (௨௫)

பணிவார்பிறவிப் பிணிபாற்றிடுமோர்
மணியோடொளிர்வாழ்க் கையுகந்தருளும்
அணிமாகறலா ளுமகத்தியனார்
பணிமாதுமைபா கர்பதத்துணையே (௨௬)

துணையென்றுனைநம் புறுதொண்டருடன்
அணையாதெனதா விநலம்பெறுமோ
பணையார்பொழின்மா கறல்வாழ்பரம
இணையாருமிலா தவருட்கடலே (௨௭)

கடல்வாய்க்கடுவைக் கடிமாகறலில்
நடமாடிடுநம் பணையின்றிலனேல்
வடவாலமர்மா லயன்வானவர்கோன்
மடவார்திருமங் கலமென்படுமோ (௨௮)

படுவெண்டலையிற் பலிதேருந ணை
விடையன்றிருமா கறல்வாழ்விகிர்த ன்
நடுவன்வலியட் டருணுதவென்னை த்
திடமார்கனிணைப் பவருஞ்சிவ மே (உ௯)

சிவமேபெறுசிந் தையுளீர்புவியி ல்
அவமாயலையா துலகன்னையெனு ந்
தவமேதருசங் கரிகாதலன்வா ழ்
நவமார்திருமா கறனண்ணுமி னே (௩௦)

வேறு.

நண்ணலர்மூவெயில் வேவநகைத் த
அண்ணலருட்டிரு மாகறலாளு ம்
புண்ணியனெந்தை பொலங்கழல்சிந்தி த்
தெண்ணியிருக்கி லிருந்தவமெய்து ம் (௩௧)

எய்தியகூற்றுவ னென்செயுநெஞ் சே
தையலிடத்துறை தத்துவமூர்த் தி
மைதிகழ்பூம்பொழின் மாகறலீச ன்
செய்யவடித்துணை சென்னியிலுற வே (௩௨)

உறவொடுபகையறு மொருமுதலீறு ம்
பிறவியுமூரொடு பேர்குலமில்லோ ன்
நிறைமுடிவிண்ணிலுறை மாகறலெம்மா ன்
அறைகழற்பதமலர் தொழவினையறு மே (௩௩)

அறுவகைச்சமயரு மவரவர்பாவு ம்
இறையெனவவாபணி யேத்துறுபெம்மா ன்
கறையணிமிடறுடைக் கவுரியோர்பாக ன்
மறுவறுசீர்த்திரு மாகறல்வாழ் வே (௩௪)

வாழ்வைமதித்துல காசையின்மாயு ஞ்
சூழ்வினையிற்சுழ லாதுலகிர்பொ ற்
றாழ்சடையன்றிரு மாகறல்சாமி ன்
ஏழ்பிறவிக்கட லேறுதலெளி தே (௧௫)

எள்ளுறுமெண்ணெயி னெங்குநிறைந் த
வள்ளன்மறைப்பொருண் மாகறலீச ன்
நள்ளிருணட்ட மிடுங்கழனுட்டி க்
கள்ளவினைகளைக் கட்டறுநெஞ் சே (௧௬)

நெஞ்சினினைப்பு மறப்பையுநீக் கி
மஞ்சிவர்மாளிகை மாகறலெந் தை
செஞ்சாணுன்னிய செவ்வியர்தா மே
அஞ்சுமடக்கு மருந்தவராவா ர் (௧௭)

ஆக்கியளித்து மழித்துமறைத்து ந்
தேக்கருள்செய்திடு சிற்பான்வைகு ம்
மாக்குலவுந்திரு மாகறல்வாழ்வோ ர்
மேக்குயர்விண்ணவர் போற்றிடுமேலோ ர் (௧௮)

மேலெனகீழென விண்ணெனமண்ணு ம்
பால்புறமுன்னெனப் பாதியுமொன்று ஞ்
சீலமுறுந்திரு மாகறல்செம்ம ற்
போலொருவானவ ரைப்புகலரி தே (௧௯)

அருமறையோதிய வந்தணரேனு ஞ்
சுரநதிமூழ்கிய தூயவரேனு ந்
திருமலிமாகறல் செம்மறனு து
அருளிலரேலவற் றாற்கதியடையா ர் (௨௦)

வேறு.

அடையுமோவினை யறிவினெஞ்ச மே
சடையனெண்புயத் தையல்பாதிய ன்
மடையுலாம்வயன் மாகறற்பிரா ன்
உடையவன்பரைப் பணியவுன்னுவா ய் (௪௧)

உன்னையன்றியோர் தேவையுன்னிலே ன்
என்னிடர்களைந் தின்பநல்குவா ய்
கன்னல்பூகமாக் காட்டுந்தண்வய ன்
மன்னுமாகறன் மானிடத்த னே (௪௨)

மானிவேர்விழி மாதர்மையலி ல்
யானழுந்தவுன் னருளுக்காவ தோ
பானலார்வயற் பாவுமாகற ன்
ஞானநாதநின் னபயநம்ப னே (௪௩)

நம்புமென்வினை யகலநாக ரோ
டிம்பரேத்துமா கறலிருந்துளா ன்
சம்பராரியைச் சாம்பராக்கி ய
செம்பொன்மேருவிற் றிரிபுராந்தக ன் (௪௪)

அந்தகாவெனை யணுகுவாய லை
கந்தமார்பொழிற் கடிகொண்மாகற ல்
இந்துசேகர னிமயவல்லிதோ ய்
எந்தையெம்பிரா னென்னையாண்டன ன் (௪௫)

என்னையாண்டவ னிமையவர்க்கெலா ம்
அன்னையத்தனு மறிவுமானவ ன்
மன்னுமாகறல் வன்மிகத்திரு ந்
தின்னனீக்குவா னெம்மனோர்க்கெலா ம் (௪௬)

எல்லையில்லுல கன்னையாய்வள ர்
முல்லையம்பிகை முலைமணந்தவ ன்
மல்லன்மாகறன் மருவுகண்ணுத ல்
வல்லபம்புகல் வல்லரில்லை யே (சஎ)

இல்லநல்லெழி லிளமைநல்விற ற்
செல்வமேவுறுஞ் சிவமுமெய்துமா ன்
மல்லுறும்பொழின் மாகறற்பிரா ன்
பல்லருள்பெயும் பாதமேத்த வே (சஅ)

ஏத்தலாவதோ வினர்தங்களா ற்
கூற்றுதைத்தபூங் கொன்றைவேணியா ன்
றோற்றமீறிலா னேத்துமாகற ற்
போற்றுகாவலான் புனிதநாமை யே (சகூ)

நீரிற்றண்மையாய் நெருப்பின்வெம்மையாய்ப்
பாரிற்றிண்மையாய்ப் பவனவன்மையாய் க்
காரின்வண்மையாய்க் கலந்துமாகற ல்
நீருலாஞ்சடை நிமலன்வைகு மே (ருo)

வேறு.

வையங்களிப்பமறையொலிப்ப வானோரயன்மான்மகிழ்ந்தேத்தப்
பைகொண்முனியும்புலிமுனியும் பாவிக்களித்துப்பணிந்துதொழ
ஐயைமகிழவன்பர்குழா மாவென்றிறைஞ்சமாகறல்வாழ்
ஐயன்மணிமன்றுடல்கண்டோ ரயன்மாலறியாப்பதம்பெறுவார்()

பெறுதற்கருமானிடாரைப் பிறந்தீருய்யுநெறிகேண்மின்
அறிதற்கருஞ்சைவாகமநூ லருணீறணிந்தைந்தெழுத்தோதி
மறுவற்றொளிருக்கணிபூண்டு வயங்குந்திருமாகறலீசன்
அறைபொற்கழற்ருள்பணிவீரே லமரோறுந்நிகராவார் (ருஉ)

ஆவேறுயர்த்தவெம்பெருமா னழலாடியகண்ணுதற்பரமன்
பூவாரிதழிமதிநதியார் பொன்றாழ்சடிலன்மன்றாடி
கோவார்பொழின்மாகறன்மேய கோமான்றிருக்கோயிலைச்சூழ
ஓவாவலம்வந்தவர்பிணியா னுலவார்பிறவாநெறிசேர்வார் (௫௩)

சோரார்தமையட்டிடுந்தாளுஞ் சிறந்தவிரலுஞ்செங்கைவிரற்
கூரார்நகமுநுதற்கண்ணுங் குறுமூரலுஞ்செஞ்சடையுமுள
நீரார்வயன்மாகறலீச னிகரின்மழுமுத்தலைவேலும்
போரார்கனகச்சாபமுமேன் பொறுத்ததுணையிர்புலவீர்காள் ()

புலைசேருடலம்பலவெடுத்துப் புவனந்தொறும்புக்குழல்வேனை
உலைவாவுதியாநெறியுதவ வுமையாளுடன்வெள்விடைமீதே
அலையார்சடிலமுடன்றோன்றி யளியாலெனையாண்டவனிடமாங்
கலைமாமதியநதவழ்மாடங் கவினுந்திருமாகறனகரே (௫௫)

நகருமனையுங்காதலியு நவில்சேய்கிளைபல்பொருளுமுயிர்
அகலுங்காலமுடன்வருமோ வளியார்பொழின்மாகறன்மேய
குகனையிபமாமுகனையருள் கோமான்பதம்போற்றுறுமடியார்
மகிழ்வுதவும்பொருளல்லான் மற்றார்துணையார்செல்வழிக்கே ()

வழியுங்கருணைத்திருமுகமு மதிப்பிஞ்சணிசெஞ்சடைக்கொழுந்
கழியுமயன்மால்வானவருங் கழிவெள்ளென்பாரணியுரமும் [துங்
பொழியுங்கதிர்மேனியிலணிவெண் பொடியுமளியார்விழிகளுமென்
விழிமுன்வருநாளென்றுரையாய் வியன்மாகறல்வாழ்விண்ணவனே (௫௭)

விண்காலனலனீர்மேதினிவெங் கதிரிந்தான்மாவெனவிளங்கித்
தண்பாற்சுவையுமணியொளியுந் தாரின்மணமுமெனவுலகிற்
பண்பாய்மறையோருவந்தேத்தும் பரமாதிருமாகறன்மேய
பெண்பாலுவந்தபித்தவுனைப் பேசியறியும்வகையாதோ(௫௮)

யாதுமறியாமுழுமுட னிவனென்றிகழாதியானிழைக்குந்
தீதுகீர்த்தின்னருள்புரியுந் திருமாகறல்வாழ்சிவபெருமான்
பூதமைந்தாறற்காணம் புகன்முக்குணனுவிருவினையா
ஓதுங்கடவுளொருவனு மொழியாதென்னுளுறைவானே (ருகூ)

உறையுங்கோயிறிருக்கயிலை யோங்கலோபொன்வரையோபொன்
இறைவன்வலமோவுமையிடமோ வேத்துமடியார் திருவுளமோ
மறையின்முடிவோ நடுமுதலோ மணிமன்றோவென்மனமோநீள்
சிறைவண்டிமிர்பூம்பொழின்மருவுந் திருமாகறல்வாழ்சிவக்கொழுந்தே ()

வேறு.

கொழுந்தும்பைப்பணி கொன்றைக்கூவிள மதிகோடல்
எழுங்கங்கைச்சமி யறுகார்வெண்டலை யென்பேந்தும்
செழுமபொற்பாசடை யணிமாகறனகர் சிவபெம்மான்
உழுந்துற்றருளிட மிலலெனவெயகு நிறைந்தானே (சுக)

எங்குநிறைந்த பராபரனெம்பிறை யிகலவெஞ்சூர்
தங்கிளையட்டருள் சண்முகனைத்தரு தனியண்ணல்
மங்கலமிக்குயர் மாகறன்மேவிய மணிகண்டன்
பொங்குவயப்பரி விற்றுழல்கின்றது புகலவீரே (சுஉ)

வீரனைநல்கி மகம்பொடிசெய்தருள் விமலேசன்
மாரனைநீறுசெய் கண்ணுதன்மாகறல் வளரெந்தை
பேருரையாதுழல் மானிடர்தேவர் பிறப்பெண்ணில்
ஊர்புழுவாதி விலங்கொடுமைக்கவு மொண்ணுதே (சுங)

ஒண்ணுதலம்பிகை பாகனைமாகற லுடையானைப்
பண்ணவனாதனைப் பண்பயில்வேதனைப் பலகாலும்
எண்ணிலகண்ணர்க ளூன்முகரிந்திர ரெண்ணில்லார்
மண்ணுறவீழ்ந்து வணங்கியெழுந்துள மகிழ்வாரே (சுச)

வாரணிகொங்கையர் மையலொழிந்து மகிழ்ந்தோர்க் கே
சீரணிமுத்தியை நல்குவமென்றுரை செய்யுமெங்கோ ன்
காரணிநீள்பொழின் மாகறன்மேவிய காமா ரி
நாரணிதன்னை யிடத்தினில்வைத்திடு நட்பென்னே (௬௫)

நட்பிகலின்றி யுரைப்பருமாதவ நண்ணுற்றோர் க்
கெட்பொழுதுட்சிவ மீகுவமென்றுரை செய்யுமெம்மா ன்
கட்பொழிபூம்பொழின் மாகறன்மேவு கறைக்கண்ட ன்
நுட்பமுடன்சிவ யோகமியற்றிய நோன்பென்னே (௬௬)

நோன்பொடுதண்மலர் தூவியவன்பர்க ளுவன்மாய ன்
நான்முகனிந்திரன் வாழ்பதமேவ நலந்தந்தோ ன்
கான்பயின்மாகறல் வாழியகண்ணுதல் காபா லி
தான்பலிகொண்டு கணத்தொடுழன்ற சழக்கென்னே (௬௭)

என்னுளிருந்துல கம்புகழ்மாகற லெங்கோமா ன்
பொன்மணியம்பர மாமலராதிய பூணும ம்
சன்மமெனுமபார வெண்டலைமதத்த பருக்கந்தா ன்
புன்மையுடன்றலை மாலைபுனைந்த புணர்ப்பென்னே (௬௮)

புணர்கருமணிக்கரி பொற்சிவிகைப்பரி பூமா னை
மணிக்கொடிவைய முதற்பலவூர்தி மகிழ்ந்தே று
திணர்ப்பொழில்சூழ்திரு மாகறன்மேவிய வெழிலெந் தி
பணைத்தமருப்பியில் வெள்விடையேறிய பண்பென்னே ()

பண்பயில்வண்டிசை நந்தனம்வண்பொழில் படிகஞ்சே ர்
மண்டபமாளிகை யம்பலமாடட மாகா தை
எண்பயின்மாகறன் மாநகாமேவிய வெண்டோளா ன்
நுண்பொடியாரிடு காடிடமாடிய நோயதென்னே (௭௦)

வேறு.

நொய்யமென்மல ரனிச்சமேனியர்விழி நோக்கின்
மையலாம்வலைத் தலைப்படுமெறியின் மாய்வேனை
ஐயநின்னருட் கடற்படிந்திடவரு ளிப்பாய்
செய்யபூம்பொழின் மாகறல்வாழ்சிவ குருவே (௭௧)

குருமணிச்சுடர்மா டநீள்கொடிகள்வான் சுரரை
வருகவென்றழைத் திடுதலையானுமா கறல்வாழ்
பரமன்மெல்லடிப் பரவிவெண்ணீறணி யாதார்
உருவம்வெம்பிண முறைவிடஞ்சுடலையென் றுரைக்கும் (௭௨)

உரைத்தநான்மறை யங்கமாகமமென வுலவிற்
றெரிதநூலெலாஞ் சிற்பரம்பொருளெனுந் தேறார்
விரித்தநாண்மலர் வாவிசூழ்மாகறல் விமலன்
சிரித்துமூவெயி லெரித்தலா லிறையெனத் தெளிந்தே (௭௩)

தெளிவிலாமுழு மூடராயினுஞ்சிறு தொழிற்செய்
களியராயினு மாகறற்சிவன்கழல் பணிவார்
ஒளிகொடேவரா மறைமுழு துணர்ந்தவே தியரும்
அளியிழற்பணி யாரெனிற்புலையரென் றறையும் (௭௪)

அறையுமண்டகோ டிகளெலாநீறெழ வாக்கி
நிறையநீறணிந் தொருவனுமெட்டிலைச் சூலம்
பொறையிலுற்றரித் தானந்தமாய்ப்பரை போற்றக்
குறும்புன்மூரலாய் மாகறற்குழகனின் றாடும் (௭௫)

ஆடையெண்டிசை யம்பரமுருவமா மண்ட
கூடநீண்முடி பாதலங்குழைகழன் மலர்த்தாள்
நீடுமெண்புய மண்டபித்திசைச்சுவர் நிகரில்
பீடுசேர்திரு மாகறற்பித்தரு னடியாரும் (௭௬)

பிஞ்ஞைகேள்வனுக் கோர்புடையோர்புடை பிரி யா
அஞ்சொலாரியைக் களித்தன்பருள்ளறி வுரு வா
மஞ்சுலாம்பொழின் மாகறற்சிவபிரான் மலர்த் தா
டஞ்சமென்றியான் புகுந்தனன்றவமபிறி துளவோ (௭௭)

உள்ளமேயுனக் கோர்மதியுரைப்பனீ யுணரா ய்
வெள்ளநீர்ச்சடை மாகறல்வித்தக னுருவா ந்
தெள்ளுநீறணிந் தைந்தெழுத்தைத்தினஞ் செபிக்கி ல்
வெள்ளியங்கிரிக் கிறையெனமேவிவீற் றிருப்பாய் (௭௮)

பாயுமால்விடைப் பரமனையுயர்பசு பதியை த்
தூயமாகறல் வாழ்சுகசொருபனைச் சுயம் பா
நாயகன்றனை நறுமலர்சொரிந்து நாடோறு * ம்
வாயினாற்றுதித் தவர்களிமமண்ணிடைப் பிறவார் (௭௯)

பிறவிவேதனை தீர்த்திடும்பெரும்பசி யுழக்கு ம்
வறுமைநீக்கிடும் வல்வினைபோக்கிடும வலிசே ர்
மறலிவீழ்ந்திட வுதைத்தருண்மாகறற் பரன்றா ள்
குறைவில்செல்வமு மளித்திடுமுத்தியுங் கொடுக்கும் (௮௦)

வேறு.

கொடியபாதகங் கங்கையின்மூழ்கிடிற் குமையுமாலயன்போற்று ங்
கடிகொண்மூதெயிற கச்சியின்வதிந்திடிற் கழலும்வானதிதோ யு
மூடிகொள்பொன்னவை கண்டெதிரபபணிநதிட முற்றுமாமகத்தீச ன்
குடிகொண்மாகற லூர்வழியேகிடிற் கூறரும்பவநீங்கும் (௮௧)

நீங்கரும்வினைக் குடம்பையாணவப்புக னிறைபுழுவுறைகூ டு
ஓங்குமும்மல பாண்டமஞ்ஞானநீ ரொழுகியசவமவெந்நோ ய்
தூங்குபேழைமா யாப்பொறியாமுடல் சுமந்திடாதெனை யாள்வா ய்
தேங்கொள்பூம்பொழின மாகறன்மேவிய சிறகுணபெருமானே (௮௨)

பெருமையோதவும் பேருருக்காணவும் பேசரும்பெருஞ்சீர்த் தி
அருமைகேட்கவு மருணமணமுகக்கவு மன்பொடுவணங்கென் றே
உருவைநல்கினை மனமுனைநினைத்திட வொருபெருவரமீவா ய்
கருவிமாமழை தவழ்பொழின்மாகறற் கணநுதற்பரமேட்டி (௮௩)

பரமுனக்கெனப் புகுந்தனன்வேறொரு பற்றிலானிவனென்று ன்
கருணைநல்கிய பசுபதிநிற்கியான்புரியுங் கைம்மாறுண பே
புரமெரித்தருள் புவனநாயகியுமை போற்றியவகததீ ச
மருவுலாமபொழின் மாகறன்மாநகர் மணிவிடைக்கொடியானே (௮௪)

விடைத்தனிக்கொடிக் காயினுமுத்தலை வேலுக்காயினும்வெங்கூ ர்
படைத்தவாய்நவி யத்தினுக்காயினும் பணித்தெனதிடர்க்குன்றை ப்
பொடித்துநின்னடித் தொண்டரிற்கூட்டிடாய் புவனநாயகிபா க
மடைத்தலைச்சுரி முகந்தவழ்வயறிகழ் மாகறலிறையோனே (௮௫)

இறைவனாகியெவ் வுலகளிப்பவனு மெவ்வுயிர்களின்றிறநோக்கி க்
குறைவில்போகமு முத்தியுமுதவுறு கோதிலாக்குணக்குன்று ய்
மறையொலித்திடு மாகறனமாநகர் மருவிமங்கலங்காத் த
பிறையணிப்பிரான் பிஞ்ஞகனெனக்கருட் பெருந்திருவளித்தானே (௮௬)

அளிக்குநான்முகப் பிரமனோபசிய வாலிலையிடைத்துயில்வா னோ
களிக்கும்வெள்விடை யுருத்திரக்கடவுளோ கயமுகத்திறையோநீ ர்
ஒளிக்குஞ்சூர்களை யொறுத்தருண்முருகனோ யாவனென்றுணரேனா ல்
துளிர்க்கும்பூம்பொழின் மாகறல்வாழ்சிவ சங்கரன்றனையம்மா (௮௭)

சங்கரிக்குமுன் றொழிதந்திடுஞ்சிவ சங்கரனுலகின் ற
சங்கரிக்கிரு நாழிநெல்லீந்தறம் வளர்த்திடவருடந்தோ ன்
சங்கரிக்குமுத் தார்வயன்மாகறற் றாணுவென்பிணிமாய ச்
சங்கரிக்குமெய்ஞ் ஞானவாளேந்திசற் குரவனிற்சார்ந்தானே (௮௮)

சாந்தநீறணி யக்கமாலிகையுமை தாய்துணைதமரன்ப ர்
வாய்ந்தபெண்டிர் கிராதைசேய்பல்லுயிர் மலமறுத்திடுமாசா ன்
றோர்ந்ததந்தையைந் தொழில்புரிசிவபிரான் செயலவன்றொண்டாகு ம்
ஆய்ந்துளோர்புகழ் தருந்திருமாகற லமருமெய்யடியார்க்கே (௮௯)

அடியர்செய்பிழை யாயிரங்கோடியு மன்பெனக்கொளும்பெம்மா ன்
முடிகொள்சென்னிவேன் மலையன்மாக்கிரன்மதி முதலினர்பிழைமுன்னாள்
ஒடிவில்பூசனை யுவந்தமாகறற்பிரா னுணர்விலேன்பிழைநீக்கி ப்
படியினல்வரந் தந்தெனையாண்டனன் பனிமதிச்சடையானே (௯0)

வேறு.

பனிவரைப்பசுங்கொடி படர்ந்தசெம்மலைபு னை
புனிதன்மாகறற்பரி பூரணன்றனன்பரா ல்
இனியகாதலாகிவாணி யிந்திராணியிந்தி ரை
யனையர்பின்றொடர்ந்தெமாவி னையமீயென்றுய்வரே (௯௧)

ஐம்பிருந்துபொறிகலங்கி யறிவழிந்துநாவற ந்
தையகண்கள்பஞ்சடைந்தெ னாவிசோருநாளில்வ ந்
தையரேத்துமாகறற் புரந்தவந்தகாரியெ ம்
ஐயையோடும்விடையில்வந்தென னவலநீக்குமப்பனே (௯௨)

அப்பணிந்தசெஞ்சடைப் பரன்புராரியன்பரு க்
கொப்பில்வைப்பதற்குமாக றற்புரந்தவெம்பிரா ன்
எப்பிறப்பினும்பிறக்கொ ணாதசெல்வமீந்தன ன்
ஒப்புவேறிலாமலென்னை யாளவந்தவொருவனே (௯௩)

ஒருமையெய்தியிருவினைப் பகுத்துணர்ந்தமாதவர் க்
கரியதானமாதிமூன்றை யுங்கடந்தவற்புத ம்
பெருகுஞானநல்கவா லயர்ந்தமாகறற்பிரா ன்
வரையிலாமலென்னையாள வருவன்மேருவில்லியே (௯௪)

வில்வினாற்றனஞ்சயன் வெகுண்டெறிந்தவேலையு ம்
கல்வினான்மகிழ்ந்துசாக் கியன்கடிந்தகாலையு ம்
வல்லமாறன்வேத்திரத்தின் மாறுநாளுமாகற ற்
செல்வன்மெய்ம்மிகச்சிறந்த சென்னிடாரைதாக்கவே (௯௫)

பாரைகூடைகொண்டுமண் சுமந்துவைகைபங்கடை த்
தாரவாடுமாகறற்பி ரானைமாறனங்கைபி ற்
சூரல்கொண்டடித்தவத் தழும்புமாயனாதிசொ ல்
ஆருயிர்க்கெலாமுறுத்த வதிசயஞ்சிறந்ததே (௯௬)

மலையடிகள் நூல்
MARAIMALAI ADIG

சிறந்தகாசிபன்புரிந்த வேள்விகாத்தசெய்யவ ன்
பிறந்திறக்குமண்டவாணர் பேசொணாதபிஞ்ஞக ன்
அறந்தவாநன்மாகறற் புரந்தவண்ணன்பால்வி ழி
நிறைந்தபாதபங்கய மலர்ந்தவென்றனெஞ்சினே (௯௭)

என்றுமாதியந்தமில் லெம்பிரானிபாச த்
தன்றுரித்தமாதுபாக னறணிந்தவேணியா ன்
பொன்றயங்குமாடமா கறற்புரந்தபூரண ன்
மன்றுளாடுகழலலாது வாழ்த்திடாவென்வாயதே (௯௮)

வாயின்மூங்கைபேசும்வல் விடங்கருண்டசெய்வள ந்
தாயுளைந்திவருமளக்கர் மீக்கருங்கலப்பி யா
மாயுமென்புமங்கையாகு மாகறற்பிரானரு ட்
பாயுமன்பரினிதிறேறு பதிகமேவுமகிமையே (௯௯)

பதிகமாகவைங்கரப் பரன்புகழ்ந்தமாகற ற்
கதிபன்வேலைநஞ்சமுண்ட கண்டனண்டர்தம்பிரா ன்
நதிகொள்வேணியமலனெந்தை நற்குஞானபானுவி ன்
கதிர்குலாவமலருமென்ற னிதயமானகமலமே (௧௦௦)

மாகராதிபன்வணங்கு மாகறற்புரந்தரு ள்
நாகபாணிபன்னிரண்டு நாமமோதுவார்த மை
நாகமீதுதுயிலுமாய னான்முகன்வணங்கிடெ ஞ்
சோகநீங்குமென்றுபின் றொடர்ந்துசெல்வர்பாரின்மேல் (௧௦௧)

இல்லையுண்டெனும்மருங்கு லேழைமார்கடங்களு ந்
கல்லுமெல்லுமேவலாற்றி யாகுலத்துழன்றியா ன்
செல்லெனத்தெழிக்குயோதை நடுவணாற்சிமிழ்ப்பு று
தொல்லைவந்தெனைப்புரக்க வுன்னுமாகறேசனே (௧௦௨)

முற்றிற்று.